## ஜிஎஸ்டி சாலையை கடந்து செல்ல

# ஆலந்தூர் மெட்ரோ அருகே நடைபாலம் விரைவில் திறப்பு

■ சென்னை

ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் அருகே பொதுமக்கள் சாலையை கடந்து செல்ல வசதியாக நடை மேம்பாலம் விரைவில் திறக்கப்படும் என மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையம் கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டது. இந்த மெட்ரோ ரயில் நிலையத்துக்கு வந்து செல்ல பயணிகள் சிறிது தூரம் நடந்து சென்று அங்குள்ள சுரங்கப்பாதையை பயன்படுத்தி வருகின்றனர். இது மக்களுக்கு சிரமத்தை ஏற்படுத்தி வருகிறது.

மேலும், இங்குள்ள ஜிஎஸ்டி சாலை வழியாக பயணிகள் சென்று வரவும் அவதிப்பட்டனர். இதனால் அங்கு நடைமேம்பாலம் அமைக்க வேண்டும் என பயணிகளும் அப்பகுதி மக்களும் கோரிக்கை விடுத்து வந்தனர்.

இதற்கிடையே, பயணிகளின் கோரிக்கை ஏற்று, அங்கு நடை மேம்பாலம் அமைக்க மெட்ரோ ரயில் நிறுவனம் முடிவு செய்தது. இதையடுத்து, கடந்த ஒரு ஆண்டாக பயணிகள் எளிதில் மெட்ரோ ரயில் நிலையம் வந்து செல்வதற்கு வசதியாக ஜிஎஸ்டி சாலையின் குறுக்கே மெட்ரோ நடைமேம்பாலம் பணியை மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது நடைமேம்பாலத்தை கட்டும் பணி இறுதிக் கட்டத்தை அடைந்துள்ளது.

இதுதொடர்பாக மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறும்போது, "ஆலந்தூர் மெட்ரோ ரயில் நிலையத்துக்கு பயணிகள் வந்து செல்ல வசதியாக ரூ.1 கோடி செலவில் நடைமேம்பாலம் கட்டும் பணிகள் முடிவடையும் நிலையில் இருக்கின்றன. அடுத்த மாதத்தில் இந்த புதிய நடை மேம்பாலம் திறந்து வைக்கப்படும். இதன்மூலம் பயணிகள், பொது மக்கள் ஜி.எஸ்.டி. சாலையை எளிதில் கடந்து செல்ல முடியும்" என்றனர்.